www.padippakam.com



# 29

# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

**-செங்கை ஆழியான்-**

**1450** ஆம் ஆண்டிற்கும் 1467 ஆம் ஆண்டிற்கும் இடையில் ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகுவினால் குருக்கள் வளவில் அழிக்கப்பட்டு முத்திரைச் சந்தியில் அமைக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் ஒன்றரை நூற்றாண்டுகளின் பின் 1621 ஆம்

உட்படுத்தினான். பிலிப் டி ஒலிவேறா, யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்த சைவாலயங்களில் பலவற்றை இடித்துத் தரைமட்டமாக்கினான். 'யாழ்ப்பாணத்திலன்றித் தமக்கெட்டிய மற்றும் பிறவிடங்களில் எல்லாம் உள்ள புத்த சைவ ஆலயங்கள் எல்லாவற்றையும் சமயம் வாய்த்து பறங்கிகள் இடித்துநாசமாக்கிவிட்டனர். 1621 ஆம் ஆண்ட பிலிப் தே ஒலிவேறா நல்லூரைத் தன்னுறைவிடமாக்கிக் கொண்டான். அவன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் தரைமட்டமாக்கி இருந்தவிடமுந் தெரியாமல் அத்திவாரத்தையும் கிளறுவித்தான். அங்கிருந்த பெரிய கோயிலில்

தே ஒலிவேறா, முன் கூறியபடி



நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை இடித்து அக்கோயிற் கற்களைக்

கத்தோலிக்க கிறிஸ்தவ

மதத்தையே மக்கள் அனைவரும் கைக்கொள்ளவேண்டும் என

ஒலிவேறாவால் இடிக்கப்பட்ட புராதன கந்தசுவாமி கோவில் கட்டப்பட்டிருந்தவிடமே. எனவே ,போர்த்துக்கேயர் காலத்தில் ; நல்லூரில் இடிக்கப்பட்டழிந்த கந்தசுவாமி கோவில் விளங்கிய இடத்தில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றமைக்கப்பட்டது. முதலில் இந்தத் தேவாலயம் களிமண்ணாலும் பனையோலையாலும் அமைக்கப்பட்டது. கி.பி.1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் ஒல்லாந்தர் வசமாகியது. அவர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்திலிருந்து தமது புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தை பரப்புவதில் தீவிரமாக இருந்தனர். மக்களைக் கத்தோலிக்க சமயத்தினின்றும் திருப்ப முயன்றனர். முன்பிருந்த கத்தோலிக்க கோயில்களை இடித்தும் சிலவிடத்தும் புதுக்கியுந்திருத்தியும் தமது மதத் தேவாலயங்கள் ஆக்கினர். 'ஒல்லாந்தர் தங்கள் அரசாட்சியின் பிற்கூற்றில் சமய விஷயமாக கொண்ட வன்கண்மையை குறைத்துக்கொண்டனர். அதனால் சைவசமயிகள் தமது ஆசாரங்களையும் வழிபாடுகளையும் பயமின்றிக்

ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி இருந்தவிடம் தெரியாமல் அத்திபாரத்தோடு அழிவுற நேர்ந்தது.



1620 ஆம் ஆண்டு பிலிப் டி ஒலிவேறா என்ற போர்த்துக்கேயத் தளபதி, பெரும்படையுடன் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தான். இதுவே போர்த்துக்கேயரின் இறுதிப்படையெடுப்பாகும். அவன் யாழ்ப்பாணத்தைப் பூரணமாகத் தன் ஆதிக்கத்துக்கு

கிறீஸ்தவரல்லாதவர்கள் மிக்க ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். அவன் அதனை அழியாதுவிட்டால், அவன் விரும்பிய எல்லாவற்றையும் வழங்குவதாக அவர்கள் வாக்குறுதி செய்து வந்தனர். ஆனால் அவன் ஒரு மதப்பற்று மிக்க கத்தோலிக்கனாதலால் அவர்களின் நடவடிக்கை அக்கோயிலை அழித்ததற்குக் கொண்டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை அத்திவாரமில்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான்' என குவேறோஸ் சுவாமிகள் தனது நூலில் எழுதியுள்ளார். இவ்விதமான கொடுந் தொழில்களைச் செய்வதற்கு அவர்களது சமயாபிமானமும் வைராக்கியமும் மறு சமயத்தவரது வழிபாட்டுக்குரிய கோயில்கள் தம்மத விரோதமென்ற நம்பிக்கையுமே காரணங்களானவர்களைத் தூண்டிவிட்டனவெனினும் பொருள் அபகரிக்கும் பேராசையே முக்கிய காரணமென்பது மறுக்கொணாத உண்மை. பிலிப்

கொண்டு கோட்டையும் வீடுகளும் கட்டினான். யாழ்ப்பாணத்திலிருந்த சைவ வைணவ ஆலயங்கள் எல்லாவற்றையும் தரைமட்டமாக இடிப்பித்தான். இதையறிந்த கோயிலதிகாரிகளும் அர்ச்சகர்களும் தத்தம் கோயில் விக்கிரகங்களைக் கிணறுகளிலுங் குளங்களிலும் போட்டு மறைத்தார்கள். கீரிமலையிலிருந்த திருத்தம்பலேஸ்வரன் கோயிலை அவர்கள் இடிக்கு முன்னே ,

விக்கிரகங்களை அக்கோயில் குருக்களாகிய பரசுபாணி ஐயர் ஒரு கிணற்றில் இட்டு மண்ணால் தூர்த்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினர். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை இடிக்குமுன் அதன் மெய்ப்பாதுகாப்பாளனாயிருந்த சங்கிலியென்னும் சைவப்பண்டாரம், அக்கோயில் விதானங்கள் வரையப்பட்ட செப்பேடு, செப்புச் சாதனங்களையும் கொண்டு மட்டக்களப்புக்கு ஓடினான். அங்கிருந்த சில விக்கிரகங்கள் தாமிரவிக்கிரகங்களை எல்லாம் அக்கோயில் குருக்கள் மார் பூதராயர் கோயிலுக்கு சமீபத்திலுள்ள குளத்திலே புதைத்து விட்டு நீர்வேலிப்பகுதிக்கு ஓடினர்.

### கந்தமடாலயம்

கி.பி.1620 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாகியது. போர்த்துக்கேய தனியரசாட்சியில்

போர்த்துக்கேய ஆட்சியாளர் வற்புறுத்தினர். 'சைவமத வணக்கம் செய்யப்படாதென்றும் பூசை முதலியன அனுட்டிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கட்டளை பிறப்பித்ததுமன்றி ஒற்றர்கள் வைத்தும் ஆராயப்பட்டது. ஆனால் அந்தரங்கமாகத் தங்கள் தெய்வங்களை வழிபடுவதையும் சைவ ஆசாரங்களையும் சனங்கள் கைவிட்டாரல்லர். தங்கள் தங்கள் வீட்டுச்

சார்களிலும் வளவுகளிலும் மரத்தடியிலும் ஒவ்வோர் அடையாளங்களை வைத்து வழிபட்டு வந்தனர். விரதகாலத்தில் சாப்பிட்ட இலைகளைக் கூரைகளிலும் வேலிகளிலும் மறைவாக ஒழித்துச் செருகி வந்தனர். ஒவ்வொருவருஞ் சிலுவையடையாளமணிய வேண்டுமென்றுங் கட்டளை பிறந்தது. உலோகங்களால் செய்யப்பட்ட சிலுவைகளை அணிவதற்குச் சனங்கள் நாணித் தங்கள் தலைப்பாகைகளைச் சிலுவை ரூபமாகக் கட்டி வந்தனர். போர்த்துக்கேயப் பறங்கியர் சைவாலயங்களைப் பாழக்கிய பின் பெரும்பாலும் அக்கோயில்களிலிருந்த விடங்களிலேயே தங்கள் கோயில்களைக் கட்டினர். நல்லூரில் யமுனா ஏரிக்கு அருகே விளங்குங் கிறீஸ்தவ கோயிலிருக்கும் இடம்

கைக்கொண்டொழுகத் தொடங்கினர். 'நல்லூரில் வாழ்ந்த சைவசமயிகள் பலர் கந்தசுவாமி கோவில் இருந்த இடத்திற்கு வந்து வழிபாடியற்றினர். போர்த்துக்கேயப் பறங்கியர்களால் இடிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோவில் அர்ச்சகரின் சந்ததியோராகிய பிரமாணர் சிலர், இக்கோயிலின் வழிபாட்டை மீளவும் ஆரம்பிக்க காரணமாக இருந்தார்கள் என அறியப்படுகின்றது. கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணோத்தமர் ஒருவர், புராதன கந்தசுவாமி கோயில் இருந்த இடத்திற்கு அண்மையில் மடாலயம் ஒன்றினை நிறுவி வேலினைப் பிரதிஷ்டை செய்து வழிபாடியற்றக் காரணமாக இருந்தார் என அறியப்படுகின்றது. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பறங்கியர்களினால் இடிக்கப் பெற்றுச் சில காலஞ் சென்ற பின் கிருஷ்ணையர் சுப்பையர் என்னும் பிராமணோத்தமரின் முயற்சியினால் அக்காலவரசனிடம் உத்தரவு பெற்று கோயில் கட்டி மடாலயமாகப் பிரதிஷ்டை செய்தனர் என யாழ்ப்பாண வைபவம் என்னும் நூல் கூறுகின்றது. இந்த உண்மையை ஆங்கிலேயராட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதம நீதியரசராக் இருந்த சேர்.அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் என்பவரின் நினைவுக் குறிப்புக்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)